**மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள், இழிவுப் பெறுமதி ரூபா 406,546 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் கையிலுள்ள காசு ரூபா 173,727 என்பன பௌதீக ரீதியில் காணப்படவில்லை. ரூபா 13,011,216 தொகையான இந்த நட்டத்திற்காக ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமையின் காரணமாக வருடாந்த / திரண்ட நட்டங்கள் அந்த அளவினால் அதிகரிக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படாமைக்கான காரணம் மற்றும் அதற்குப் பொறுப்புவாய்ந்த நபர்களை தீர்மானிப்பதற்கு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் முகாமைத்துவத்தால் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எதுவும் தற்போது கம்பனிக்கு சொந்தமாக காணப்படவில்லை. அந்த ஆதனங்கள் தற்போது அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக தொகுதி கம்பனியினால் பயன்படுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில் இந்த பெறுமதியை கம்பனிக்கு செலுத்துமாறு எழுத்து மூலம் அக்கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதற்காக இழப்பீட்டு ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள் மற்றும் ரூபா 173,727 தொகையான பணம் என்பவற்றிக்காக எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் இழப்பீட்டு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

**1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 3,246,376,040 ஆக இருந்ததுடன், அத்திகதியில் கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 3,171,376,040 மறைப் பெறுமதியைக் காட்டியது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி கம்பனியை கலைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், 2021 மார்ச் 15 ஆம் திகதி வரையும் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகம்புற துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டமையினால் அதனை கலைப்பதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது என கம்பனியால் தீர்மானிக்கப்பட்டிருந்து. அதனால் அதற்காக தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளின் பிரதிகள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் பெற்றப்பட்டதன் பின்னர் தேவையான ஏனைய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். | கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை யினால் அதனை விரைவாக அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விரைவாக செயற்பட வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 17,782,563 | | | |
| கப்பல் எண்ணெய் காப்பீட்டிற்காக கிடைக்க வேண்டிய மீதி | 28,040,453 | மூல பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| சந்தைக் கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 3,589,879 | | | |
| செலுத்த வேண்டிய ஏனையவைகளுக்குரிய மீதி | 7,297,497 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 103,666,952 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 98,938,252 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா 4,728,700 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான விடயங்கள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிட வேண்டியிருந்த டக் கப்பலுக்கான இழப்பீட்டு பணம் ரூபா 25,719,981 தொகை, முகாமைத்துவ சேவைகள் கட்டணம் ரூபா 76,547,855 மற்றும் முகாமைத்துவ கம்பனியின் வளவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய வாகனங்களுக்காக விநியோகிக்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் லீட்டர் 11,449 இற்கான ரூபா 1,399,116 தொகை என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2021 மே 15 ஆம் திகதி வரையிலும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பணத்தை இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிடுவதற்காக 2021.01.25 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. எனினும், அந்த பணம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை துறைமுக அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிலிருந்து அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணமாக ரூபா 5,800,921 காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியின் 2020 ஆம் | இது தொடர்பாக கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி உரிய பணம் செலுத்த வேண்டிய மீதியாக இருக்குமாயின் அதனை கம்பனியின் நிதிக் |

| | | |
|---|---|---|
| ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தொகை செலுத்த வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய முகாமைத்துவ கட்டணம் மற்றும் கம்பனியின் நானாவித சிட்டைகளை தீர்ப்பதற்காக மேற்கூறப்பட்ட தொகை அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. | | கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு தனியார் வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட ரூபா 3,144,178,059 இற்கு சமமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 24,002,438 கடன் தொகைக்கு உரிய கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போதும், அதன் பின்னனைய ஆண்டுகளின் போதும் கடன் தவணை அல்லது வட்டித் தொகை எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 180,268,282 தொகையான வட்டித் தொகையையும் உள்ளடக்கியதாக 2020 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித்தொகை ரூபா 971,528,124 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி ரூபா 4,480,972,700 இற்கு சமமமான ஐ.அ.டொலர் 24,038,495 ஆக இருந்தது. இந்த கடன் மீதி தொடர்பாக கம்பனியால் 2021 சனவரி 12 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட கடன் மீதியின் சரியான தன்மை தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், இந்த கடன் பணத்தை மீள அறவிடுவதற்காக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனிக்கு எதிராக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கௌரவ நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2. ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி எப் (F) வகையில் உள்ளடங்குகின்றமையினால் கம்பனியின் கட்டுப்பாட்டு சபை கூட்ட படி செலுத்துவதற்காக பரிந்துரை மற்றும் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்ட ஏ (A) முதல் ஈ (E) வரையான வகைப்படுத்தலின் பிரகாரம் ஆகக்கூடிய கூட்டப்படியாக ரூபா 12,500 தொகை ஏ (A) தரத்திற்குரியதாக இருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இல்லாத எப் (F) வகையின் பொதுமுயற்சியான கம்பனி 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 04கூட்டங்களுக்காக பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காகவும் வருகையின் போது ரூபா 25,000 வீதம் ரூபா 475,000 தொகையும், 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 15 கூட்டங்களை நடாத்தியதற்காக ரூபா 1,875,000 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | 2020 சனவரி 13 ஆம் திகதிய சனாதிபதி சுற்றறிக்கை இலக்கம் பீஎஸ்/எஸ்பீ/சுற்றறிக்கை/02/2020 இன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவர் படி மாதம் ஒன்றுக்கு ரூபா 25,000 வரை செலுத்த முடியும். அதற்கு முன்னர் நடைபெற்ற 2019 மற்றும் 2018 இன் கூட்டங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது | கம்பனி செயலாளரினால் பணிப்பாளர் சபை தீர்மானங்களின் செயல்முன்னேற்றங்களை | ஏற்றுக் கொள்கின்றோம். இதற்காக கம்பனியின் | பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பிரிவு. | ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் ஆண்டின் போது அவ்வாறு மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அது கம்பனிச் செயலாளரின் பொறுப்பாகும். | எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 5,037,187 ஆக இருந்த போதும் அதில் ரூபா 3,021,258 தொகைக்குரிய வரி சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் வரி சான்றிதழ் இன்மையின் காரணமாக மேற்கூறப்பட்ட கிடைக்க வேண்டிய மீதி கிடைத்தல் நிச்சியமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சகல வரிகள் தொடர்பான கொடுப்பனவுகள், முறைப்பாடு சமர்ப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காணப்பட்ட இந்த பெறுமதியையும் மிகவும் விரைவாக மீண்டும் கணிப்பிட்டதன் பின்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி இறுதி தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். |
| (ஆ) நிதியதிச் சட்ட கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,381,117 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி மீதியை தீர்த்து வைப்பதற்கு கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச் சட்ட கொடுப்பனவான வருமான வரி மீதியை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 246,874,417 நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 128,503,752 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நட்டம் ரூபா 118,370,365 இனால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலும் நட்டமொன்று காணப்படுகின்றமைக்கு இலங்கை அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் செயல் நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு வருமானம் காணப்படாமை மற்றும் கடன் அடிப்படையிலான வட்டி என்பன பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| | 2020<br>(ரூபா) | 2019<br>(ரூபா) |
|---|---|---|
| வருமானம் | - | - |
| நேர்ச் செலவினம் | - | - |
| நிர்வாக செலவினம் | **(10,664,971)** | **(7,191,239)** |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | **(10,664,971)** | **(7,191,239)** |
| தேறிய நிதிக் கிரயம் | **(142,218,752)** | **(148,185,664)** |
| அந்நிய செலாவணி நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | **(93,990,694)** | **26,873,152** |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | **(246,874,417)** | **(128,503,752)** |
| வருமான வரி | - | - |
| வரிக்குப் பின் தேறிய இலாபம் | **(246,874,417)** | **(128,503,752)** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இந்த கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டமையின் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கம்பனிக்கு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

ii. 2019 ஆம் ஆண்டில் ரூபா 26,874,152 தொகையான அந்நிய செலாவணி நாணயமாற்று நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 93,990,694 அந்நிய செலாவணி இலாபமாக ஏற்பட்டிருந்தது.

iii. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிர்வாக செலவினம் ரூபா 3,474,732 இனால் அதாவது 48 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1:3.40 | 1:3.29 |
| விரைவு சொத்து விகிதம் | 1:3.43 | 1:3.32 |

2019 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1:3.29 மற்றும் 1:3.32 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அது முறையே 1:3.40 மற்றும் 1:3.43 ஆக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஊழியரினால் இழப்பீடு செலுத்தி நீக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையினால் கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் தொழில்பிணக்குகள் தீர்த்தல் இலக்கம் A/37/2017 ஆம் தீர்மானம் மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆம் திகதிய தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த நிபந்தனைகளுக்கு இணங்கியதன் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த நிபந்தனையின் நிபந்தனை இலக்கம் 18(ஆ) இன் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவை மேலதிக நேர படி மற்றும்/ அல்லது 2018 சனவரி வரை நிலுவை சம்பளம் செலுத்த வேண்டி இருக்குமாயின் அக்கொடுப்பனவுகள் 2018 பெப்பரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியமை இணங்கப்பட்டிருந்தது. கம்பனியினால் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனியின் செயற்பாடுகள் செயலற்று காணப்பட்ட 2017 | இணக்க சபை கலந்துரையாடலுக்கு முன்னாள் கம்பனியின் முகாமைத்துவம் பங்குபற்றியிருந்தது. இந்த இணக்க சபை நிபந்தனைகளில் 18 ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ இன் கீழ் ஊழியர்களின் நிலுவையாகியிருந்த சம்பளம் செலுத்துதல் தொடர்பாக இணங்கப்பட்ட நிபந்தனைகள் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளுக்கு இணங்கும் அடிப்படை பின்வருமாறு,<br><br>2017 நவம்பர் மாதத்தின் 29 ஆம் திகதி சகல ஊழியர்களும் வளாகத்தில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்து. அது வரையில் நவம்பர் மாதத்தில் வேலை ஆற்றிய காலத்திற்குரிய மேலதிக படிகள் மற்றும் சம்பளம் செலுத்துதல் இடம்பெறாதிருந்தமையால் விஷேடமாக நவம்பர் மேலதிகநேர படி செலுத்துமாறு இணங்கப்பட்டிந்தது. அவ்வாறே அநேகமான ஊழியர்களில் 97 சதவீதம் அளவில் ஆரம்ப சம்பளம் ரூபா 12,000 – 20,000 இடையே காணப்பட்டது. அதனால் செயலாற்றல் படி | இழப்பீட்டு பணம் செலுத்தும் போது உடன்பட்ட நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கு மாயின் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அவற்றை மீள அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய பிரயாணச் செலவினம், தங்குமிட படிகள் மற்றும் செயலாற்றல் படிகள் மற்றும் வாகன படிகளாக ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் உரிய விடயங்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தியதற்காக பொறுப்பு வாய்ந்ததரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்காக முகாமைத்துவம் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நிரந்தர படியாக கம்பனியின் ஆரம்பம் முதல் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும் எரிபொருள், போக்குவரத்து, தங்குமிட படிகள் போன்றவை கம்பனியின் மத்திய மற்றும் உயர்தர முகாமைத்துவத்தின் 07 பேர்களுக்காக மாத்திரமே செலுத்தப்படுகின்றது. அந்த ஊழியர்களுக்கு கம்பனியின் மிகுதி வேலைகளைச் செய்வதற்காக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 360 ஊழியர்களுக்கு மேல் சேவையாற்றிய கம்பனியொன்று ஒரே தடவையில் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தினால் ஊழியர்களை விலக்குதல், இழப்பீட்டு பணம் கலந்துரையாடல், சொத்துக் கையளித்தல், ஆவணங்களை அகற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்காக நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்கள் இருக்க வேண்டும். அந்த ஊழியர்கள் 2018.01.31 வரையும் தமது சேவையை முன்னரைப் போன்றே நிறுவனத்திற்கு வழங்குகின்றமையால் அவர்களின் சகல சமபளங்களும் செலுத்தப்படுதல் வேண்டும். | |
| (ஆ) | வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு யாவும் தொடர் இலக்கத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவ்வாறே சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் கணக்காய்விற்காக பூரணப்படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்டு வைப்பதற்கு | அம்பாந்தோட்டை துறைமுக வளவில் சில மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட மிகவும் குறுகிய அறிவித்தலுடன் சகல ஊழியர்களையும் கோவைகள் முதலியவற்றையும் அகற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஊழியர்கள் வளவில் பலாத்காரமாக இருந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அதன் | கம்பனியின் கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை கட்டிடத்தில் இருந்து அகற்றும் போது முறையாகவும் ஒழுங்கு முறையாகவும் மேற்கொள்ளாமையினால் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியாகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று |

| | | |
|---|---|---|
| உறுதிச் சீட்டுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் கண்காணித்து கொள்ள வேண்டியிருந்த போதிலும் மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட முறையே ரூபா 29,975,094 தொகைக்கும், ரூபா 4,543,395 தொகைக்கும் உரிய 123 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் 2021 மே 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்புலத்தில் இந்த ஆவணங்கள் தொலைந்து போயிருந்தமை ஏககாலத்தில் ஏற்பட்டிருந்ததாக முன்னாள் தலைவரினாலும் உங்களுக்கு விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளின் பிரதிகள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை செயல்வழிக் கோவையினதும் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கங்களின் பிரகாரமும் பெறுகைகளின் போது மிகவும் சிறந்த வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகம் ஒன்று காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி கண்காணித்துக் கொள்ள வேண்டிய போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிகள் கம்பனிக்கு ரூபா 7,250,000 தொகை சட்ட செலவினமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த சட்டத்தரணியை தெரிவு செய்யும் போது வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகத்துடனான முறைமையொன்று பின்பற்றப்பட்டமைக்கான தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உரிய சட்ட ஆலோசனைக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. புதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் முதலாவது சந்தர்ப்பத்தின் போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட DDR 1347/19 என்ற வழக்கு தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கு 2020.08.18 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கின் வெளிப்படையான விஷேடமான தன்மை வழக்கு கோரப்பட்ட ஆரம்ப தினத்திலேயே எதிர்ப்பும் கோவையிடப்பட்டிருந்தது. அவ்வாறு இல்லையாயின் கௌரவ நீதிமன்றத்தினால் வழக்கில் கோரப்பட்டுள்ள ரூபா 4.4 பில்லியன் தொகைக்காக சட்ட ரீதியான தீர்ப்பு வெளியிடல் தீர்மானிக்கப்பட்டால் கம்பனி கடுமையான சிக்கல்களுக்கு உட்படும். அது வரையில் கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட தொகை ரூபா 1.2 | பெறுகை நடவடிக்கைகளின் போது வெளிப்படையானதும், சிறந்த நிர்வாகத் திறமையுடனும் நடந்துகொள்ளுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

பில்லியனுக்கு சமமான தொகையொன்று இருந்தமையால் ஆகும். அதன் பிரகாரம் கூடிய விரைவில் கௌரவ நீதிமன்றம் அந்த எதிர்ப்பை கோவையிடுவதற்கான தேவை ஏற்பட்டமையினால் அதற்கான காலமொன்று காணப்படாதிருந்தமையால் நம்பிக்கையான மற்றும் மிகவும் விரைவாக எதிர்ப்பினை தயாரிப்பதற்காக சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் பிரதான தேவையொன்றாக இருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கூறப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் உதவி பெறப்பட்டிருந்தது. அதன் போது சட்டத்தரணிக்காக சட்டத்தரணி கட்டணம் முழு வழக்கு நடவடிக்கைகளுக்காகவும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

வழக்கில் சட்டத்தரணிக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தின் மூலம் பின்வரும் முழுமையான விடயங்கள் மேவுகை செய்யப்பட்டுள்ளது.

1. சட்டத்தரணியை சந்தித்ததல் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்.

2. எதிர்ப்புக்களை கோவையிடல்.

3. வழக்கிற்குரிய எழுத்து மூல ஆலோசனைகளை கோவையிடல்.

4. சட்டரீதியான விடயங்கள் தொடர்பான கேள்விகள் எழுமாயின் எழுத்து மூல ஆலோசனைகளை கோவையிடல்.

5. நீதிமன்றத்தில் சமூகம் அளித்தல் போன்ற சகல நடவடிக்கைகளுக்காகவும்